## இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல்கொடுத்த

# மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, ஜூலை 3 -

**"இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக தன் வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன் அவர்கள். இறுதி மூச்சு வரையிலும் தமிழ்மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார், செயல்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் அவர்கள் போராடி வந்தார்.

### தலைவர் கலைஞரின் நண்பர்!

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச் சிறந்த நட்புறவை சம்பந்தன் அவர்கள் பேணி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களின்



நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பல முறை அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015-ஆம் ஆண்டில் சம்பந்தன் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, "எனது அருமை நண்பர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பிறகு, தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவுகாலம் ஏற்படாதா என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையைத் தருகிறது" என்று முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2016-ஆம் ஆண்டு 13-ஆவது முறையாகத் தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பந்தன் அவர்களும், "இதுவொரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்" என வாழ்த்து தெரிவித்திருந்தார்.

### தமிழ்ச் சொந்தங்களுக்கு பேரிழப்பு!

ஈழத்தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய சம்பந்தன் அவர்களின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை வடக்கு ஒன்றியம், நல்லாப்பாளைம் ஊராட்சிகளில் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் வீதி, வீதியாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தனர். ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், ஜி.ரவிச்சந்திரன், அரசு வழக்கறிஞர் பொன்.கோபு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக பல கோரிக்கைகள்!

## ஒன்றிய அமைச்சர் ராம்மோகன் நாயுடுவிடம் துரை வைகோ எம்.பி. நேரில் சந்தித்து வழங்கினார்!

திருச்சி, ஜூலை 3 -

ஒன்றிய விமானத் துறை அமைச்சரை இந்தியக் கூட்டணி கட்சி எம்.பி.. கள் சந்திப்பு குறித்து துரை வைகோ எம்.பி. கூறியதாவது:

ஒன்றிய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு அவர்களை 01.07.2024 அன்று பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அன்பு சகோதரர் கே.என்.அருண் நேரு, மாநிலங்களவை உறுப்பினர் சகோதரர் எம்.எம்.அப்துல்லா, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் முரசொலி ஆகியோருடன் நானும் இணைந்து சென்று, நேரில் சந்தித்து திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை வைத்தோம்.

அமைச்சர் அவர்களிடம் நாங்கள் அளித்துள்ள கோரிக்கை மனுவில்,

திருச்சி பன்னாட்டு விமான நிலைய புதிய கட்டிடத்தை நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக பிரதமர் மோடி அவர்கள் திறந்து வைத்தார். இந்தப் புதிய கட்டிடம் இரண்டு வாரங்களுக்கு முன்பாக பயன்பாட்டிற்கு வந்தது. கூடுதல் பயணிகளின் வருகைக்காகவே இந்தப் புதிய



கட்டிடம் திறந்து வைக்கப் பட்டது.

கூடுதல் விமான சேவைகள் வழங்கப்பட்டால் மட்டுமே பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆனால், அதிக எண்ணிக்கையில் விமானங்களை இயக்குவதற்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் போதிய ஓடுதள வசதி இல்லை. ஆகவே, விமான ஓடுபாதை விரிவாக்கப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க தேவையான நிதியை வழங்குமாறு கோரிக்கை வைத்தோம்.

இரண்டாவதாக, இருதரப்பு விமான சேவை ஒப்பந்தத்தின் (BASA) படி, திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு விமான சேவை வழங்கிட அந்நாட்டு விமான நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. திருச்சியில் இருந்து ஏர் இந்தியா விமானம் மட்டுமே துபாய் உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு இயக்கப்படுகிறது. வாராந்திர சேவை அடிப்படையில் ஒரு வாரத்திற்கு 3760 இருக்கைகள் மட்டுமே இந்த விமானத்தில் நிரப்பப்படுகின்றன. இதனால் பயணக் கட்டணமும் பல மடங்கு அதிமாக உள்ளது. ஆகவே, வளைகுடா நாடுகளுக்குச் செல்வோர் பெங்களூர், சென்னை, கொச்சின் உள்ளிட்ட நகரங்களில் இருந்து விமான சேவையை பயன்படுத்துகின்றன. இதனால், திருச்சி விமான நிலையத்திற்கு வர வேண்டிய வருவாய் பெங்களூர், கொச்சின் போன்ற விமான நிலையங்களுக்குச் சென்று விடுகின்றன.

எனவே, திருச்சியில் இருந்து வளைகுடா நாடுகளுக்கு கூடுதல் விமா னங்களை இயக்க இருதரப்பு விமான சேவை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனுமதி வழங்க வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் பயனடைவதோடு திருச்சி விமான நிலையத்திற்கு வருவாயும் அதிகரிக்கும் என, கோரிக்கை வைத்தோம்.

அதேப்போல, திருச்சியில் இருந்து டெல்லிக்கு நேரடி விமான சேவை இல்லை. ஆகவே, டெல்லியில் இருந்து திருச்சிக்கும், திருச்சியில் இருந்து கொச்சினுக்கும் விமானங்களை இயக்கிட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தோம்.

இந்த மூன்று கோரிக்கைகளும் நிறைவேற்ற ப்பட்டால், திருச்சி மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் புதுக்கோட்டை, தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், கரூர், பெரம்பலூர், அரியலூர் உள்ளிட்ட அருகாமை மாவட்ட மக்களுக்கும் பெரும் பயன் விளை விப்பதாக இருக்கும்.

ஒன்றிய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு ராம்மோகன் நாயுடு அவர்களின் தந்தை காலஞ் சென்ற கிஞ்சராபு எர்ரான் நாயுடு அவர்கள் இயக்கத் தந்தை தலைவர் வைகோ அவர்களின் நெருங்கிய நண்பர் ஆவார். அமைச்சர் ராம்மோகன் நாயுடு அவர்கள், தலைவர் வைகோ அவர்களின் உடல் நலத்தை மிகுந்த அக்கறையுடன் கேட்டறிந்ததோடு, தலைவர் அவர்கள் டெல்லிக்கு வரும்போது நேரில் வந்து சந்திக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

திருச்சி விமான நிலைய சேவைகள் தொடர்பாக நாங்கள் தெரிவித்த கோரிக்கைகளை கண்டிப்பாக நிறைவேற்றித் தருவதாகவும் உறுதியளித்தார் என்று துரை வைகோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

## முதலமைச்சரின் பாராட்டத்தக்க 'நீட்' எதிர்ப்புத் தொடர் பணிகள்!

# ஜூலை 15-இல் திராவிடர் கழகம் சார்பில் இரு சக்கர வாகனப் பிரச்சாரம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 3 -

கொரோனாவைவிட கொடிய 'நீட்'டை ஒழிக்கத் திராவிடர் கழகம் மேற்கொண்டுவரும் 'நீட்' ஒழிப்புப் பணிக்கு ஒத்துழைப்புத் தாரீர் என்றும், ஜூலை 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை திராவிடர் கழகம் நடத்தும் தமிழ்நாடு தழுவிய இரு சக்கரப் பிரச்சாரப் பயணம் ஜூலை 15 அன்று சேலத்தில் சங்கமிக்கும் என்றும், 'நீட்' தேர்வால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படுகிற அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேட்டுக்கொண்டுள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

'நீட்' என்ற மருத்துவப் படிப்பு, மேற்பட்டங்கள் படிப்பு களுக்குத் திணிக்கப் பட்டு ஒன்றிய அரசின் "தேசிய தேர்வு முகமை" என்ற ஒன்றின்மூலம் - கடந்த எட்டு ஆண்டு களுக்கும்மேல் நடைபெற்று வரும் தேர்வுகளில் ஊழல் கொடி கட்டிப் பறப்பதோடு, நாற்றமெடுத்து நாடு முழுவதும் மாணவர்களும், பெற்றோரும் கொதித்துக் கொண்டுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்ற இயலாத நிலையில், பல மாநிலங்களில் இளம் மாணவர்கள், மாணவிகள், பெற்றோரின் உயிர்களையும் பலி வாங்கிடும் ஒரு கொடுமையான வாள் 'நீட்' - அதன் பிறவி ஊழல்கள் படமெடுத்தாடி பழிதீர்த்து வருவது ஒருபுறம்.

மற்றொருபுறம் பல்லாயிரக்கணக்கில் இந்த 'நீட்' தேர்வை மூலதனமாக்கிக் கொண்டு 'கோச்சிங் சென்டர்' என்பதன்மூலம் ஏழை, எளிய, நடுத்தர விவசாயிகளின் பிள்ளைகளின் - பெற்றோர்களின் வாழ்வாதாரத்தையே, ரத்தம் குடிக்கும் அட்டைபோல லட்சக்கணக்கில் பகற்கொள்ளை நடைபெறுகிறது!

கேள்வித்தாள்களை விற்றும், ஆள் மாறாட்டம், முறைகேட்டுக்கு வாய்ப்பாக குறிப்பிட்ட தேர்வு மய்யம் தலைதூக்கி நிற்கிறது. (அதில் 'குஜராத் மாடல்' தான் முன்னணியில் இருக்கிறதோ என்ற அய்யம் கிளம்பியுள்ளதால் மிகவும் வேதனையும், வெட்கமும் அடையக் கூடிய ஒன்று). குஜராத்தில் குறிப்பிட்ட சென்டரில் ஏராள முறைகேடுகள்.

'நீட்' தேர்வு நுழைகிற போது அதனைக் கடுமையாக எதிர்த்த முதலமைச்சராக குஜராத் முதலமைச்சர் மோடி இருந்தார்; இன்று அவரே அதன் திணிப்புக்கும், ஊழல்கள் வெளிப்படையான பனிப் பாறைகள் வந்துள்ள நிலையிலும், மவுனம் சாதிப்பதோடு, அரசமைப்புச் சட்ட விரோதமான இந்தத் தேர்வு முகமையை விடாமல், கட்டிப் பிடித்து, இளந்தலைமுறையினரின் எதிர்காலத்தை இருட்டறையாக்கும் நிலையே நீடிக்கிறது.

முதன்முதலில் இதன் கொடுமையை - வழமை போல் - தந்தை பெரியாரின் சமூகப் புரட்சி இயக்கமான திராவிடர் கழகம் - 'நீட்' நுழையும்போதே அதன் ஆபத்தான விளைவு களை - விளக்கி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் திராவிடர் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது(29.12.2010).

மாநில அரசியல் களத்தில் இன்றுள்ள தி.மு.க.வின் தலைவராகப் பொறுப்பேற்று, எதிர்க்கட்சித் தலைவராக சிறப்புடனும், பொறுப்புடனும் தமது கடமையைச் செய்த நமது தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், அனைவரையும் இணைத்து தமிழ்நாட்டின் எதிர்ப்பு முழக்கத்தை நாடறியக் கொண்டு சென்றார்.

இன்றும் அப்பணியில் தி.மு.க.வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் ஓய்ந்ததே இல்லை. திராவிடர் கழகமான தாய்க் கழகம் ஒரு சமுதாய இயக்க மாதலின் இடையறாத அடைமழைப் பிரச்சாரத்தைத் தமிழ்நாடு முழுவதும் செய்தும், பல போராட்டங்களை 'நீட்'டுக்கு எதிராகத் தொடர் போராட்ட பிரச்சார பெருமழையாகப் பெய்து வரு வதும் நல்ல வண்ணம் முதல் வெற்றியைத் தந்துள்ளது.

இந்தியா முழுவதிலும் உ.பி. முதல் பல வடபுலங்கள், தென்மாநிலங்கள், குஜராத், மகாராட்டிரா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்கள், ஹிந்தி பேசும் மாநிலங்களான டில்லி, அரியானா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், மேற்குவங்கம், பீகார், ஒடிசா உள்பட பல மாநிலங்களிலும் கடுமையான எதிர்ப்புகள் பாதிக்கப்பட்ட காரணத்தால், நீட் எதிர்ப்புக் குரல் எங்கும் ஓங்கிப் பரவலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு - தி.மு.க. அரசு இரண்டுமுறை (இப்போது மூன்றாவது முறை தீர்மானமாகவும்கூட) தனி சட்டமசோதாவாக - விலக்கு அளிப்பதுபற்றி ஜனநாயக முறையில் சட்டமன்றத்தில் - அதற்கு அதிகாரம் இருக்கும் காரணத்தால், நிறைவேற்றி அனுப்பியது. இங்குள்ள ஆளுநர், தனக்கு இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதி, இறுக்கிக் கிடப்பில் சில காலம் போட்டார்; மக்கள் கிளர்ச்சிமூலம் வாங்கிய 'அரசியல் குட்டுகள்' காரணமாக, வேறு வழியின்றி, இறுதியில், "தான் ஒரு தபால்காரர் மட்டுமே" என்பதை உணர்ந்து, குடிய ரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி, அங்கே உள்துறை அமைச்சகத்தில் அது முடிவு அறிவிக்கப்படாமல் உள்ள அவலம் இன்னமும் தொடர்கிறது!

### உச்சநீதிமன்றமும் கடுமையான கேள்விகள்!

மீண்டும் காங்கிரஸ் கட்சி உள்பட அடங்கிய இந்தியா கூட்டணியும், பல கட்சிகளும், இன்று இந்த 'நீட்' தேர்வு, ஊழலின் ஊற்றுக் கண்ணாகவும், கார்ப்பரேட் கொள்ளையர்களின் வசதி படைத்த கூடாரமாகவும் இருப்பதைப் புரிந்து கொண்டு, எதிர்ப்புக் குரலை ஓங்கி ஒலித்து வருகின்றன.

மீண்டும் வீண் பிடிவாதம் - வறட்டு ஜம்பத்தைக் காட்டி வருகிறது - ஒன்றிய பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்றமும் 'நீட்' ஊழல்பற்றி கடுமையான குரலில் கேள்விகளை கேட்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் 'நீட்' தேர்விலிருந்து "தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்திடுக" என்று கோரும் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்து, ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றிய முதலமைச்சருக்கு மக்களின் பாராட்டு குவிந்து வருகிறது.

அது மட்டுமல்லாமல், எட்டு மாநில முதலமைச்சர்களுக்கும் நமது முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் தனித்தனியே கடிதங்களை எழுதி, 'நீட்' தேர்வை ரத்து செய்யவோ அல்லது விரும்பும் மாநிலங்கள் மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று கடிதமும் எழுதி காலத்தாற் தேவைப்படும் கடுமையையும் செவ்வனே நிறைவேற்றி யுள்ளார்.

திராவிடர் கழகம் 'நீட்' தேர்வு ஒழிப்பிற்கான அதன் தொடர் பணியாக வருகின்ற 11 ஆம் தேதி தொடங்கி, தமிழ்நாடு முழுவதும் இரு சக்கர வாகனப் பிரச்சார 'நீட்' எதிர்ப்புப் பிரச்சார பணிகளை 5 அணிகளாக தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகள், சிற்றூர், பேரூர் எல்லாம் பிரச்சாரம் செய்து, சேலத்தில் கல்வி வள்ளல் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதி அன்று நிறைவு செய்ய உள்ளது.

புதிய கோணத்தில் சட்டப் போராட்டத்திற்கும் அது ஆயத்தமாகி உள்ளது.

'நீட்' தேர்வு என்ற இந்தப் பலி பீடம் மூடப்படுகிற வரை இடையறாத போராட்டம் நடத்தி, அதற்கு எந்த விலையும் கொடுக்கவும் திராவிடர் கழகம் எப்போதும் தயாராக இருக்கும். அனைவருக்கும் இக்கொடுமையின் கோரத்தின் வடிவத்தை விளக்கிப் போராடி, வெற்றி பெறும் வகையில் அறப் போர்க் களத்தில் என்றும் சலிப்பில்லாத சமராக அதனை நடத்த, அனைத்துப் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படவிருக்கிற அத்துணை பேரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

கோவிட் - 19 என்ற கரோனா தொற்றைவிட ஆபத்தானது - இந்த 'நீட்' தேர்வு! அரசமைப்புச் சட்ட விரோத இந்த 'நீட்' தேர்வு கல்லறைக்குப் போகும்வரை நம் பணி ஓயாது! ஓயாது!! ஓயவே, ஓயாது!!!

இது உறுதி! உறுதி!! உறுதி!!!

'நீட்' தேர்வை மாற்றி, "பழைய முறைதான்; புதிய வர்ணம்" என்றெல்லாம் திருத்தி நீடிக்க யோசித்தால், அது மூளைச்சாவை அடைந்தவருக்கு மற்ற சிகிச்சை தந்து அமர வைக்கும் அர்த்தமற்ற போக்கு போன்றதேயாகும்!

எனவே, அடியோடு 'நீட்' தேர்வைக் கைவிட்டு, மாநிலங்களின் உரிமைகளைக் காப்பதே சரியான அரசமைப்புச் சட்ட அணுகுமுறையாகும்.

இவ்வாறு கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா வை ஆதரித்து விக்கிரவாண்டி பேரூர் பகுதியில் வாக்காளப் பெருமக்களிடம் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் உதயசூரியன் சின்னத்தில் வாக்குச் சேகரித்தார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் சபா. இராசேந்திரன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், விழுப்புரம் நகர செயலாளர் இரா.சக்கரை மற்றும் விக்கிரவாண்டி பேரூர் கழக நிர்வாகிகள் வாக்குச் சேகரித்தனர்.



திருவாரூர் மாவட்ட மருத்துவ அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாமை பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ தலைமையில் தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர்டாக்டர். அஞ்சுகம் பூபதி துவக்கிவைத்தார் .மாவட்ட மருத்துவர் அணி தலைவர் டாக்டர் வி.ஜே..சரவணன், மாவட்ட அமைப்பாளர் டாக்டர் திவாகரன்,துணை தலைவர்கள் என்.பாலசுந்தரம், டாக்டர். எஸ்.வெங்கட்ராமன்,டாக்டர்.ஆர்.எஸ்.மலர்க்கொடி, துணை அமைப்பாளர்கள் டாக்டர்.ஷர்மிளா பானு, என்.பி.சரவணன், எம்.தீபன், கே.பி.ரமேஷ் குமார் ,நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற துணைதலைவர் அகிலா சந்திரசேகர், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர் .